இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

தலைவர், 'சோம்பேறியே! பொல்லாத பணியாளனே, நான் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவன். நான் தூவாத இடத்திலும் போய்ச் சேகரிப்பவன் என்பது உனக்குத் தெரிந்திருந்தது அல்லவா? அப்படியானால் என் பணத்தை நீ வட்டிக் கடையில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் வரும்போது எனக்கு வரவேண்டியதை வட்டியோடு திரும்பப் பெற்றிருப்பேன்' என்று கூறினார். 'எனவே அந்தத் தாலந்தை அவனிடமிருந்து எடுத்து பத்துத் தாலந்து உடையவரிடம் கொடுங்கள். ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். (மத் 25: 23-29)

# அன்பே நம் வாழ்வின் மையம், மகிழ்ச்சியின் ஆதாரம்

**வத்திக்கான்:** கடந்த நவம்பர் மாதம் 7ஆம் தேதி, செவ்வாய்கிழமையன்று அன்பை வாழ்வின் மையமாகக் கொண்ட டுவிட்டர் செய்தியை வெளியிட்டள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மகிழ்ச்சியாக இருக்க பணக்காராகவோ, புகழ் பெற்றவராகவோ அல்லது சக்திவாய்ந் தவராகவோ நாம் இருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக நம் இதயத்தின் தாகத்தைத் தீர்க்ககூடியது அன்பு மட்டுமே, அன்பு மட்டும் தான் நம் காயங்களை ஆற்றும், அன்பு ஒன்று தான் நமக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தருமென்றும், மேலும், இயேசு நமக்குக் கற்பித்த உன்னத வழி இது தான், நம் முன் அவர் திறந்து வைத்துள்ள பாதையும் இதுதான் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

போர்கள் பெருகி வருகின்ற இன்றைய சூழலில், திருத்தந்தையின் இந்த டுவிட்டர் செய்தி பகையினை நீக்கி, ஒற்றுமையில் ஒருங்கிணைய வழிவகுப்பதாகவுள்ளது.

**தொடர்ந்து,** தாழ்ச்சி ஒருவரை கடவுளுக் கும் உடன் வாழும் சகோதரர்களுக்கும் நெருக்கமானவர்களாக மாற்றும் திறன் கொண்டது என்றும், புத்திசாலித்தனமான மற்றும் அமைதியான பணியாற்றும் திறன், கொடுப்பதை உன்னதமாக்குகிறது, பெறுவதை எளிதாக்குகிறது மற்றும் இயல் பாகப் பகிர்கிறது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த நவம்பர் 6 திங்கள் கிழமை வத்திக் கானின் கிளமெந்தினா அறையில் இறை



*திருத்தந்தையை அரவணைக்கும் குழந்தை*

இரக்கத்தின் அப்போஸ்தலிக்க சபை சகோதரர்கள் மற்றும், ஜெலாவில் உள்ள இறை இரக்கத்தின் சிறு இல்லக் குழுவினரைச் சந்தித்த போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏழை மக்களுக்கான அன்றாட உணவு வழங்கும் செயல், கல்வி, குடும்பம், மீட்புப்பணி செயல்பாடுகள் என அவர்கள் ஆற்றிவரும் பணிகளுக்குத் தன் வாழ்த்துக் களையும், நன்றியினையும் தெரிவித்தார்.

மிகவும் எளியவர்கள் துன்புறுபவர்களின் நிலைகண்டு, கடந்து செல்லாமல் அவர்கள் அருகில் நெருங்கி நின்று பாதுகாத்து செயல்படும் அக்குழுவினரை வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், தேவையில் இருக்கும் சகோதர சகோதரர்களுக்கு உதவவும் நற்செயல்கள் செய்ய கடவுளால் தூண்டப்படவும் அவர்கள் தங்களை அனுமதித்து உள்ளார்கள் என்றும் குறிப் பிட்டார்.

படைப்பாற்றல், துணிவு, தாராள மனம் கொண்டு உடன்வாழும் மனிதர்களுக்கு உதவவும் பாதுகாக்கவும் வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், இறைஇரக்கம் என்னும் ஒரே உணவு கிறிஸ்துவின் நற்கருணையின் சீடர்களாகவும், அவருடன் இணைந்து இறைத்தந்தையின் முகத்தை வெளிப்படுத்துபவர்களாகவும் நம்மை மாற்றுகின்றது என்றும் கூறினார்.

புனிதமான, அமைதியான, படைப்பாற்றல் உடன் கூடிய பணிபுரியும் திறன் மற்றும் அதிகமான தாழ்ச்சி கொண்டு உடன் வாழும் சகோதர சகோதர்களின் தேவை களுக்குப் பதிலளிப்பதில், தயார் மனநிலையுடன் துணிவாக இருக்க வேண்டும் என்றும், அதே நேரத்தில் இறைத்தந்தையின் முன் அனைவரையும் கொண்டு வந்து சேர்ப்பதற்கான முயற்சி களையும் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

# கூலிம் பங்கில் இருநாள் தலைமைத்துவ தியானம்

**கூலிம்:** கெடா மாநிலத்தின் கூலிம் நகரில் அமைந்துள்ள திருஇருதய ஆண்டவர் பங்கின் தமிழ் திருத்தூதர் பணிக்குழுவின் ஏற்பாட்டில், தலைமைத்துவ தியானம் ஒன்று நடைபெற்றது.

பினாங்கில், ஸ்டெல்லா மாரிஸ் மையத்தில் கடந்த நவம்பர் திங்கள் 4 மற்றும் 5 ஆகிய நாள்களில் நிகழ்வுற்ற இத்தியானத்தை பங்குத்தந்தை Msgr ஹென்ரி ராஜு அவர்களும் பங்குப் பொதுநிலையினரில் சிலரும் வழிநடத்தினர். ஏறக்குறைய 30 பேர் கலந்துச் சிறப்பித்த இத்தியானம் பணிக் குழுவினரின் ஆன்மீகம் மற்றும் ஆக்கப்பூர்வப் பங்கேற்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



இருநாள்களிலும் தியான சொற்பொழிவுகள் மட்டுமின்றி அவ்வப்போது சிறு சிறு விளையாட்டுகளும், குழு நடவடிக்கை களும் நடத்தப்பட்டதால் பங்கேற்ற அனைவரும் சோர்வின்றி ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். நிறைவாக, ஒருவருக் கொருவர் அமைதி பகிர்வோடு தியானம் இனிதே நிறைவுற்றது.



*ஜெ. செல்வநாதன், கூலிம்.*



# வட்டார ஆயர் பேரவையின் சமூக தொடர்பு ஆணையத்தின் கூட்டம் நடைபெற்றது

## இதயப்பூர்வமாக செவிமடுத்தல்

மலேசியா-சிங்கப்பூர்-புருணை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் (CBCMSB) சமூக தொடர்புக்கான பிரிவின் வருடாந்திர கூட்டத்தில், கோலாலம்பூர், கூச்சிங் உயர்மறைமாவட்டங்களின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர்கள் அடங்கிய 27 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கோத்தா கினாபாலு, மற்றும் பினாங்கு, மலாக்கா-ஜொகூர், சிபு, சண்டக்கான், கெனிங்காவ் மற்றும் புருணையின் திருத்தூதக மறைமாவட்டங்களின் பிரதிநிதகளும் கலந்துகொண்டனர்.

நவம்பர் 3-5, 2023 வரை நடைபெற்ற இக்கூட்டம் 16 பிரதிநிதிகளுக்கு உடல் ரீதியாகவும், மற்றவர்களுக்குப் பினாங்கில் உள்ள ஸ்டெல்லா மாரிஸ் தியான மையத்திலும் இருந்து இயங்கலை வழியாகவும் நடத்தப்பட்டது. இது கடந்த 25 ஆகஸ்ட் 2023 அன்று இயங்கலை வழியாக நடைபெற்ற RCSC கூட்டத்தின் தொடர்ச்சியாகும்.

இக்காலத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) தோற்றத்தின் விளைவால், தொலைத் தொடர்பு மிகவும் சவாலுக்குரியதாக மாறியுள்ளது வெகுவாக உணரப்படுவதாகக் கருத்துரைக்கப்பட்டது. இதனால், முன்னோக்கி செல்லும் போது, காலத்தின் அறிகுறிகளுக்கு உணர்திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டிய அவசியம் என்பதுபற்றியும் விவாதக்கப்பட்டது.

### செவிமடுக்கும் ஆற்றல், இரக்கம் மற்றும் தொண்டு


கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் பிரதிநிதிகள்

மேற்கண்ட சந்திப்பின்போது, திருத்தொண்டர் ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்கள் இரு பகிர்வுகள் கொண்ட அமர்வுகளை வழிநடத்தினார். முதல் நாள் முதல் அமர்வில், உள்ளார்ந்த வகையில் மக்களின் தேவைகளுக்குச் செவிமடுக்கும் ஆற்றலை வளர்த்தல் குறித்துப் பகிர்ந்துகொண்டார்.

இரண்டாவது நாள் நடைபெற்ற இரண்டாவது அமர்வில், 'இதயப்பூர்வமான தொடர்பு என்றால் என்ன?' என்ற கேள்வியை எழுப்பி, இதயத்துடன் பேசுவது, உணர்ச்சிகளை உணர்ந்து நிர்வகிப்பது மொழி இடையூறுகள், முன்கூட்டிய கருத்து பதிவுகள் மற்றும் கடினமான உரையாடல்களை மேற்கொள்ளுதல் ஆகியவை இக்காலத்தில் தவிர்க்க முடியாதவை என்றும் வாழ்க்கையின் ஒரு பகுதி என்றும் எடுத்தியம்பினார். மேலும், நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் கட்டியெழுப்புவது இதயப்பூர்வமான தகவல்தொடர்புகளின் அடித்தளமாகும் என்றும் விளக்கினார்.

### கர்தினல் செபஸ்டியன் பிரான்சிஸ் தொடக்கத் திருப்பலியைக் கொண்டாடினார்

மேற்கண்ட சமூகத் தொடர்பு சந்திப்பின் போது, தலைவர் கர்தினல் செபஸ்டியன் பிரான்சிஸ் அவர்கள் மாலை தொடக்க திருப்பலிக்குத் தலைமை ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டம் முழுவதும் உடனிருந்த கர்தினல் மறையுரையின் போது வட்டார சமூக தொடர்புகளின் செயல்பாடுகள் குறித்து ஒரு மேலோட்ட கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொண்டார்.

நிறைவாக, பங்கேற்ற ஒவ்வொரு மறைமாவட்டத்தின பிரதிநிதகளும் தத்தம் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் சமூகத் தொடர்பைப் பற்றிய திட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

*தமிழாக்கம்: ஆர்.கே.*

# போர்களால் இயற்கையின் அழிவு

போர் என்றவுடன் அதற்கு பலியாகின்றவர்களாக நாம் மனித உயிர்களையும், அழிவுக்குள்ளாகும் நகர்களையும் கட்டிடங்களையும்தான் எண்ணிப் பார்க்கிறோம். ஆனால், அதையெல்லாம் தாண்டி, போரினால் ஏற்படும் சுற்றுச்சூழல் அழிவு என்பது, போரினால் பாதிக்கப்பட்ட, அதேவேளை மறைக்கப்பட்ட ஒரு பலிகடாவாகத்தான் இருக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக ஆயுத மோதல்களால் நீர் மாசடைந்துள்ளது, பயிர்கள் தீக்கிரையாகியுள்ளன, காடுகள் அழிவுக்குள்ளாகியுள்ளன, மண் விஷமாகியுள்ளது, எண்ணற்ற விலங்கினங்கள் கொல்லப்பட்டுள்ளன. இதனால் போர் காலத்தில் மட்டுமல்ல, அதற்குப் பின்னரும் வாழ்வு அச்சுறுத்தலிலேயே இருந்து வருகிறது. இது தவிர, வரலாற்றை நாம் ஆழமாக உற்று நோக்கினோமென்றால், கடந்த 60 ஆண்டுகளில் இடம்பெற்ற உள்நாட்டு மோதல்களில் குறைந்தபட்சம் 40 விழுக்காடு இயற்கை வளங்களோடு தொடர்புடையது என்பது உண்மை. இது மேலும் இரு மடங்காகுமோ என்ற அச்சத்தையே வல்லுனர்கள் தொடர்ந்து வெளியிட்டுவருகின்றனர்.

காசா-இஸ்ராயேல் மோதலில் சுற்றுச்சூழல் அழிவு என்று பார்த்தோமானால் முதலில் குடிநீர் மாசுகேட்டைத்தான் குறிப்பிட வேண்டும். குழந்தைகளுக்கான ஐ.நா.வின் நிதி நிறுவனமான யுனிசெப்பின் கூற்றுப்படி, காசாவின் குடி நீர் விநியோகத்தில் 96 விழுக்காடு குடிப்பதற்கே தகுதியற்றதாக மாறிவிட்டது. காசா மக்களுள் 10 விழுக்காட்டினருக்கே நேரடியாக சுத்தக் குடி நீர் கிடைக்கும் வசதி உள்ளது. அதுபோல், இஸ்ராயேலிலும் தண்ணீர் பற்றாக்குறை, கழிவுகள் அகற்ற முடியாமை, மாசுகேடு என பிரச்சனைகள் உள்ளன.



# கொடைகளைப் பகிர்ந்தளிக்கும் மனம் கொள்வோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 33ஆம் ஞாயிற்றுக்கிழமை நீதிமொழிகள் நூலிலிலருந்து எடுக்கப் பட்ட இன்றைய முதல் வாசகத்தில், அதன் ஆசிரியர் ஒரு நல்ல மனைவியின் சில குணங்களைப் பட்டியலிட்டுள்ளார். அவள் கணவனைக் கவனித்துக்கொள்கிறாள், கணவன் சம்பாதிக்க வெளியில் சென்றிருக்கும் போது வீட்டை நிர்வகிக்கிறாள். உண்மையுள்ள மனைவி, குடும்பத்தின் நல்ல ஒழுங்குக்கு தான் பொறுப்பு என்பதை அறிந்திருக்கிறாள். இன்னும் தன் வீட்டிற்கு வெளியே ஏழைகளுக்கு உதவுவதோடு, இறை நம்பிக்கையில் நிலைத்திருக்கிறாள். அவளது மிகப் பெரிய குணம், அவளுடைய அழகு அல்ல, ஆனால் அவளுடைய இறை அச்சம் என்கிறார்.

நாம் அனைவரும் ஒளியின் பண்புகளை அணிந்துகொள்ள நம்மை ஒவ்வொருவரையும் அழைக்கிறார் புனித பவுல். ஒளியின் பண்புகள் தானும் ஒளிர்ந்து பிறரையும் ஒளிர்விப்பதாகும். நாம் நம் திறமைகளைக் கொண்டு நாமும் உயர்ந்து, பிறரையும் உயர்த்த வேண்டும்.

இறைவன் மனிதனுக்கு அளித்திருக்கும் திறமைகள், கொடைகள் ஏராளமானவை; அவை ஒரே விதமானது அல்ல, மாறாக ஒவ்வொருவருக்கும் அனைத்தும் கொடுக்கப்படுவதில்லை. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில், கொடைகளின் செயல்பாடுகள் நன்மைக்காகவே வெளிப்படுகின்றன. உதாரணத்திற்கு நல்ல குரல் வளம் கொண்டவர் திருஅவையிலே பாடல் குழுவில் சேர்ந்து பாடலாம், இறை வார்த்தை வாசிக்கலாம், மேலும் மறைகல்வி போதிக்கலாம், நோயாளிகளைச் சந்திக்கலாம். இப்படியாக பல ஞானக் காரியங்களில் ஈடுபடுத்திக்கொள்ளலாம்.

திறமைகளை எப்படி, எதற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற படிப்பினையை நற்செய்தி எடுத்துரைக்கிறது. அதே போல முதல் வாசகத்தில் குடும்பத் தலைவி இறையாட்சி கனவை செயல்படுத்தி நனவாக்கும் பாணியில் நம்மையும் அழைக்கிறது.

இந்த இறைவார்த்தைப் பகுதிகளை நாம் சவாலாக உணர வேண்டும். கடவுள் கொடுத்த திறமைகளையும் கொடைகளையும் நாம் எப்படிப் பயன்படுத்துகின்றோம் என்பதற்கு நாம் பொறுப்பேற்கிறோமா? நாம் எப்படி நம் குடும்பத்தை அன்பு செய்கிறோம்? தேவையில் உள்ளோரை நாம் எப்படி கவனிக்கிறோம்? இதற்கெல்லாம் நாம் பதில் சொல்ல வேண்டும். நம்முடைய உதவி தேவைப் படுபவர்களிடம் நாம் அக்கறை காட்டுவதன் மூலம் இயேசுவின் மீது நாம் எவ்வாறு அக்கறை காட்டினோம் என்பதன் அடிப்படையில் நமது இறுதித் தீர்ப்பு அமையும்.

நமது இறுதி தீரப்பின் போது, ஆண்டவராகிய இயேசுவைச் சந்திக்கும் போது, ஒவ்வொரு வார இறுதியிலும் நாம் திருப்பலுக்குச் சென்றோமா என்று கேட்கப்படமாட்டோம் (அது முக்கியம் என்றாலும்). நாம் திருவிவிலியத்தில் எந்தெந்த வசனங்கள் எங்குள்ளன என்று மேற்கோள் காட்ட முடியுமா என்று கேட்கப்பட மாட்டோம். இன்றைய நற்செய்தியில் ஊழியர்களிடம் உரிமையாளர் கேட்பது போல், கடவுள் நமக்கு வழங்கிய கொடைகளைப் பொது நலனுக்காக எவ்வாறு பயன்படுத்தினோம் என்றுதான் கேட்கப்படுவோம்.

எனவே, விழிப்போடும் அறிவுத்திறமையோடும் பயனுள்ள வாழ்வு வாழ விழிப்புடன் செயல்படுவோம்.

*ஆவி. டேவிட், குளுவாங்*

**ஆண்டின் பொதுக்காலம் 33 ம்-ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | நீ.மொ 31:10-13,19-20,30-31 |
| தி.பா | 128: 1-2. 3. 4-5 |
| 2-ம் வாசகம் | 1 தெச 5: 1-6 |
| நற்செய்தி | மத் 25: 14-30 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**